கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 158 | 13-12-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 158 | 13-12-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார்

### திராவிட மாடல் ஆட்சி தொடரும்” உதயநிதி

சென்னை: டிச. 13–

“வரவிருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும்“ என துணை முதல்வர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

திமுக இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு வரும் 14ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடக்கிறது.

இந்நிலையில், இது குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “மாநிலம் மாவட்டம் மாநகரம் பேரூர் ஒன்றியம் கிளை வட்டம் என்று தமிழ்நாட்டின் எல்லாத் திசைகளிலும் வேர்விட்டிருக்கிறது திமுக இளைஞர் அணி. வழக்கமான நிர்வாக அமைப்புடன் இந்த ஆண்டு இரண்டு புதிய முன்னெடுப்புகளையும் திமுக இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது.

இளைஞர் அணியின் சமூகவலைதளப் பக்கங்களை நிர்வகிப்பதற்கு என்று ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் சமூக வலைதளங்களுக்கான துணை அமைப்பாளர்களை நியமித்து வருகிறோம். ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர, பகுதி, பேரூர், வார்டுகளிலும் அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணிக்கு நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம்.

இப்படி, முதல்வரின் வழிகாட்டலில், தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட வலுவான அணியாக விளங்குகிறது திமுக இளைஞர் அணி.

இப்படி, 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பைக் கொண்டு செயல்படும் இளைஞர் அமைப்பு, இந்திய அளவில் திமுக இளைஞர் அணி மட்டுமே.

இப்படி, நியமிக்கப்பட்ட 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம்தோறும் நிர்வாகிகள் சந்திப்பை நடத்த வேண்டும் என்ற முதல்வரின் உத்தரவின்பேரில், முதற்கட்டமாக வடக்கு



மண்டல நிர்வாகிகள் சந்திப்பை 14.12.2025, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடத்தவிருக்கிறோம்.

1.30 லட்சம் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூடும் பிரமாண்ட நிகழ்ச்சியாக நடக்கவிருக்கும் இந்த ‘வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்’பில் கழகத் தலைவர், முதல்வர் ஸ்டாலின் சிறப்புரை ஆற்றவிருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வரவிருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்னும் வெற்றிச் செய்திக்கு அடித்தளமாக இந்த ‘இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு’ அமையும் என்பது உறுதி.” என்று தெரிவித்துள்ளார்.

## “15ம் தேதி தமிழகம் வருகிறார் அமித்ஷா



சென்னை, டிச. 13–

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. இந்த தேர்தலுக்கு ஒவ்வொரு கட்சிகளும் ஆயத்தமாகி வருகின்றன. தற்போதைய நிலையில் நான்குமுனை போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தி.மு.க. தலைமையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகள் ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்று உள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜனதா உள்ளது. இது தவிர விஜய்யின், த.வெ.க. தலைமையில் ஒரு அணியும், நாம் தமிழர் கட்சி தனி அணியாகவும் போட்டியிட உள்ளன. பாட்டாளி மக்கள் கட்சியும், தே.மு.தி.க. மற்றும் டி.டி.வி. தினகரனின் அ.ம.மு.க.வும் தங்கள் நிலையை இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. இந்த கூட்டணி நிலைப்பாடு மாறுதலுக்கு உட்பட்டது. எந்த கட்சி, யாருடன் கூட்டணி சேருவார்கள் என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க முடியும். அ.தி.மு.க. தனது கூட்டணிக்குள் பா.ம.க. மற்றும் தே.மு.தி.க.வை கொண்டு வர விருப்பப்படுகிறது. அதற்கான மறைமுக பேச்சுவார்த்தை நடக்கிறது. அதேவேளையில், இப்போது கூட்டணியில் உள்ள பா.ஜனதாவுக்கு எத்தனை சீட்டுகள் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் அந்த கட்சியினர் இடையே ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில், தேர்தல் நெருங்கும் நிலையில் பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை மந்திரியுமான அமித்ஷா வருகிற 15ம் தேதி தமிழகம் வருகிறார். டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை வரும் அமித்ஷா அங்கிருந்து வேலூருக்கு செல்கிறார். அங்கு நடைபெற உள்ள பல்வேறு நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார். மேலும் கூட்டணி விவகாரம், தேர்தல் பணிகள் குறித்து பாஜக மாநில நிர்வாகிகளுடன் அமித்ஷா ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நாளை டெல்லி சென்று அமித்ஷாவை சந்திக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.”,

## “தவெகவில் கடுமையாக உழைக்க முடிவு செய்துவிட்டேன்” : செங்கோட்டையன்



சென்னை: டிச. 13–

“என்னை அரவணைத்துச் செல்லும் இயக்கத்தில் சேர்ந்ததில் எந்தத் தவறும் இல்லை. எம்ஜிஆர், ஜெயலலிதா இருந்தபோது அதிமுகவில் எப்படி இருந்தனோ, அது போன்று தான் தவெகவில் தற்போது இருக்கிறேன். தவெகவில் கடுமையாக உழைக்க முடிவு செய்துவிட்டேன்” என தவெக நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “வரும் 18 ஆம் தேதி தவெக தலைவர் விஜய் ஈரோடு வரவிருக்கிறார். காலை 11 மணியில் இருந்து 1 மணி வரை நிகழ்ச்சி நடைபெறும். அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். அரசு அதிகாரிகள் ஆலோசனைகளைக் கேட்டு இந்த நிகழ்ச்சியை நடத்த இருக்கிறோம். இந்நிகழ்ச்சி வரலாறு படைக்கும் நிகழ்வாக இருக்கும்.

தமிழக வெற்றி கழகத்தில் பலர் இணைய வாய்ப்புள்ளது என்றுதான் சொன்னேன் தவெக அதிமுகவாக மாறும் என்று நான் சொல்லவில்லை. அதிமுகவில் இருந்து என்னை நீக்கியதை எதிர்த்து தொடர்ந்த வழக்கு, நிலுவையில் இருக்கிறது. புதிதாக வந்தவர்கள் என்னை நீக்க முடியாது.

தவெக தலைவர் விஜய்யை முதல்வர் வேட்பாளராக ஏற்பவர்கள் கூட்டணிக்கு வரலாம். தமிழக வெற்றி கழகத்தின் பரப்புரை கூட்டத்திற்கு தடை ஏதும் இல்லை. நான் விருப்பப்பட்டுதான் இந்த இயக்கத்தில் சேர்ந்திருக்கிறேன். கடுமையாக உழைக்க வேண்டும் என முடிவு செய்துவிட்டேன்.

என்னை அரவணைத்துச் செல்லும் இயக்கத்தில் சேர்ந்ததில் எந்தத் தவறும் இல்லை. எம்ஜிஆர், ஜெயலலிதா இருந்தபோது அதிமுகவில் எப்படி இருந்தனோ, அது போன்று தான் தவெகவில் தற்போது இருக்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மத்திய அரசு கொண்டுவந்துள்ள விதை சட்டத்தை கண்டித்தும், அதனை திரும்ப பெற வலியுறுத்தியும் கோவையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




கோவை டிசம்பர்: 13

மத்திய அரசின் விதை சட்டம் 2025ஐ கண்டித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோவை மாவட்டக் குழு சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சு. பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இதில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய சு. பழனிசாமி, விதை சட்டம் 2025 விவசாயிகளின் விதை உரிமைகளை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பெருநிறுவனங்களிடம் ஒப்படைக்கும் அபாயம் உள்ளது என்றும், விதை விலைகள் அதிகரித்து விவசாயிகள் பாதிக்கப்பட வாய்ப்பு அதிகம் என்றும் தெரிவித்தார். மாநில அரசுகளின் அதிகாரங்களும் இதனால் குறைக்கப்படுகின்றன என்றார்.

மேலும், விவசாயிகளின் கருத்துகளைப் பெறாமல் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அதனை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என்றும், மின்சார திருத்தச் சட்டம் 2025ஐயும் திரும்ப பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## ஈரோட்டில் நடைபெற்ற தேசிய உணவு திருவிழா



ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடை பெருந்துறை சாலையில் உள்ள தங்க மகாலில், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் ஊட்டச்சத்து மிக்க சிறு தானிய இயக்கம், சிறு தானிய உணவுத் திருவிழா நடைபெற்றது. சிறுதானிய விழாவை தொடங்கி வைத்து சிறுதானிய தொழில்நுட்ப, கையேட்டினை அமைச்சரசு. முத்துசாமி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ஈரோடு ஆட்சியர்ச. கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. சி சந்திரகுமார், ஏஜி வெங்கடாஜலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர்வி. செல்வராஜ், வேளாண்மை இணை இயக்குனர் சிவக்குமார் மற்றும் அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## அரியலூர் தினசரி காய்கறி மார்க்கெட்டிற்கு புதிய கட்டிடம் சாலை பணிகள் என 11 கோடியே 19 லட்சம் மதிப்பிலான பணிகளை போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்



அரியலூர் நகராட்சிக்குட்பட்ட தினசரி காந்தி மார்க்கெட்டில் சேதமடைந்திருந்த பழைய கட்டிடங்கள் அகற்றப்பட்டு புதிய கட்டிடம் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியிருந்தது இதனையடுத்து தினசரி காந்தி மார்க்கெட்டிற்கான 2 கோடியே 67 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான கட்டுமான பணிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார் மேலும் கட்டிடம் கட்டுவதற்கான கட்டிட வரைபடங்களை ஆய்வு செய்து பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார் இதனையடுத்து அரியலூரில் இருந்து கோவிந்தபுரம் வரையிலான இடைவெளி தடத்திலிருந்து இருவழிச்சாலையாக தரம் உயர்த்துவதற்கான பணிகள் மற்றும் அரியலூரில் இருந்து பல்வேறு கிராமங்களை இணைக்கும் வகையில் அயனாத்தூர் வரையில் உள்ள இடைவெளி தடத்திலிருந்து இருவழிச்சாலையாக தரம் உயர்த்துவதற்கான பணிகள் என மொத்தம் 11 கோடியே 19 லட்சம் மதிப்பிலான பணிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ரத்தினசாமி அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பா உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## அரியலூர் இட ஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி பாமக ராமதாஸ் அணியை சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



அரியலூர் அண்ணா சிலை அருகே பாட்டாளி மக்கள் கட்சியின் ராமதாஸ் அணி சார்பில் மாவட்ட செயலாளர் காடுவெட்டி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்தில் பெரும் வாரியாக உள்ள வன்னியர் இன மக்களுக்கு உரிய இட ஒதுக்கீடு 10.5% வழங்க வேண்டும் கர்நாடகா தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தியது போல தமிழகத்திலும் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தி கோசங்களை எழுப்பினர் ஆர்ப்பாட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸ் பிரிவு அணியினர் மற்றும் வன்னியர் சங்கத்தினை சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

## அரியலூர் பல்வேறு கிராமங்களை இணைக்கும் வகையில் ரூ.25 கோடியே ரூ.63 லட்சம் மதிப்பிலான சாலை பணிகளை அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்



அரியலூர். டிச. 13–

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் செந்துறை ஆண்டிமடம் ஆகிய ஒன்றியங்களில் பல்வேறு கிராமங்களுக்கு தடையில்லா போக்கு வரத்தை ஏற்படுத்தும் வகையில் சாலை மேம்படுத்தும் பணி மற்றும் ஒரு வழி சாலைகளை இருவழி சாலைகளாக அகலப்படுத்தும் பணிகளை போக்கு வரத்து மற்றும் மின் சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார். திருச்சி சிதம்பரம் தேசிய நெடுஞ் சாலையில் தேசிய நெடுஞ்சாலையால் கைவிடப்பட்ட ஓடுதளத்தின் தரத்தை மேம்படுத்துதல், செந்துறை ஒன்றியத்தில் உஞ்சினி கிராமத்திலிருந்து வாரியங்காவல் வரையிலான ஒரு வழி சாலையை இருவழிச் சாலையாக அகலப் படுத்தி உறுதிப்படுத்துதல், அரியலூரிலிருந்து செந்துறை வரை இரு வழி தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக சாலை அகலப்படுத்தி தடுப்பு சுவர் மற்றும் மைய தடுப்பு அமைத்தல், செந்துறையிலிருந்து புது வேட்டக்குடி வரை சாலையின் தரத்தை மேம்படுத்துதல், பொன் பரப்பி திட்டக்குடி சாலையை ஒரு வழி சாலையிலிருந்து இருவழி சாலையாக தரம் உயர்த்துதல், செந்துறை திருமாந்துறை வரையிலான சாலையை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சாலை பணிகளையும் அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்

மேலும் உடையார் பாளையம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பயன் பாட்டிற்காக பயன்படுத் தப்படவுள்ள லாரியின் சேவையையும் தொடங்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் பல்துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## பாரதியார் பிறந்தநாள் விழா



அரியலூர். டிச. 13–

அரியலூர் மாவட்டம் சிறுவளூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கூடல் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் சின்னதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அரியலூர் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி தமிழ் துறை பேராசிரியர் முனைவர் அசோகன் அவர்கள் கலந்து கொண்டு பேசுகையில்

மகாகவி பாரதியார் இந்திய விடுதலைக்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டவர் அவரை உற்று நோக்குங்கள் அவரது கவிதைகளை ஆழ்ந்து படியுங்கள் நாடு ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டு இருந்த பொழுது தம் பாடல்கள் மூலம் விடுதலை வேட்கையை தூண்டியவர் பல மொழிகளை கற்றுத் தமிழ் மொழியின் சிறப்புகளை பல்வேறு கவிதைகள் பாடல்கள் ஆகியவற்றின் மூலம் உலக மக்களுக்கு வழங்கியவர் வழங்கியவர்.

எனவே பள்ளி மாணவிகள் பாரதி கண்ட புதுமை பெண்ணாக இருக்க வேண்டும். அச்சமின்றி அனைத்து துறைகளிலும் சாதனை படைக்க வேண்டும் என்றார் . பாரதியார் பாடல்கள் கவிதைகள். ஒப்புவித்தல் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆசிரியர்கள் வெங்கடேசன் அந்தோணி டேவிட் . அபிராமி ஆய்வக உதவியாளர் மணிகண்டன் பயிற்சி ஆசிரியர்கள் காஞ்சனா. கார்த்திகா ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர் . பாரதியார் திருவுருவ படத்திற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர், ஆசிரியை தனலட்சுமி அனைவரையும் வரவேற்றார். செந்தமிழ் செல்வி நன்றி கூறினார்.

## நிழல்குடை வேண்டி பொதுமக்கள் கோரிக்கை.



திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் புத்தாநத்தம் ஊராட்சி புத்தாநத்தம் பஸ் நிறுத்தம் அருகில் பயணியர் நிழல் குடை அமைத்துத்தர வேண்டுமென பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது.இதே இடத்தில் ஏற்கனவே நிழல்குடை இருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருடத்திற்கு முன் தேசிய நெடுஞ்சாலை பணி விரிவாக்கத்தின் காரணங்களால் பஸ் நிறுத்தம் அருகில் இருந்த நிழல் குடை அகற்றப்பட்டது. தற்சமயம் பஸ் நிறுத்தத்தில் நிற்கக்கூடியவர்கள் வெயிலிலும் மழையிலும் நிற்பதற்கு இடமில்லாமல் அங்காங்கே கடைகளிலும் சாலையோரங்களிலும் நிற்கின்றனர்.பள்ளி,கல்லூரிக்கு செல்லும் மாணவர்களும்,வேலைக்கு செல்பவர்களும்,பொதுமக்களும் நிழல் குடை இல்லாமல் பெரிதும் அவதிப்படுகின்றனர். இதனைக்க்கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன்கருதி விரைந்து நடவடிக்கை எடுத்து பயணியர் நிழல் குடை அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென நீதிக்கதிர் எக்ஸ்பிரஸ் நாளிதழ் வாயிலாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## புதுவையில் ஒரு பெண் முதலமைச்சர் தலைமையில் ஆட்சி அமைய வேண்டும்

### ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தில் புதிதாக இணைந்த மகளிர் மத்தியில் R.L. வெங்கட்ராமன் பேச்சு.!!!.

புதுச்சேரி, டிச. 13–

புதுச்சேரியில் பல்வேறு கட்சிகளில் இருந்து பிரிந்து இருநூற்றுக்கும் மேற்பட்ட மகளிர்கள் ஆ எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். இதற்கான இணைப்பு விழா கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு திருமதி. கோமதி சங்கர் தலைமை தாங்கினார். ழி. சிவகுமாரன் அவர்கள் கூட்டத்திற்கு வந்த அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் ஷி. ஸி. சிவகுமார், யி. சுப்ரமணியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கூட்டத்தில் மாநில தலைவர் ஸி .லி. வெங்கட்ராமன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசியதாவது.

புதுவை சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஆட்சி செய்த அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களுக்கான ஒரு ஆட்சியை உருவாக்க வில்லை. எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்களது கட்சி, குடும்பம் மட்டும்தான் பயன் பெறுகிறது. மற்ற கட்சிகள் உத்தமர்கள் போல் மக்கள் பிரச்சனைகளை கையில் எடுத்து மக்களுக்காக பாடுபடுவது போல் போராட்டம் ஆர்ப்பாட்டம் போன்று செயல் பட்டு விட்டு தேர்தல் வர ஒரு வருடத்திற்கு முன்பிலிருந்து பணம், பரிசு பொருட்களை கொடுத்து வெற்றி பெற்று விடலாம் என்ற எண்ணத்தில் செயல்படுகிறார்கள். பிறகு ஆட்சி செய்தவர்கள் எதிர்க்கட்சியாகவும் மக்களுக்காக போராட்டம் நடத்தியவர்கள் ஆளும் கட்சியாகவும் வருவார்கள் . மீண்டும் தொடர்ந்து இதே நிலைதான் உருவாகுமே தவிர யாரும் மக்களுக்கான ஆட்சியை உருவாக்க தயாராக இல்லை. இதனை அரசியலில் 49 ஆண்டுகளாக ,7 முதல் அமைச்சர்களுடன் பயணித்தும் பார்த்தும் வருகிறேன். ஆகவேதான் ஊழலற்ற நேர்மையான ஜனநாயக ரீதியான மக்களுக்கான ஒரு ஆட்சியை உருவாக்க ஒரு பெண் முதல் அமைச்சர் தலைமையில் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தில் உருவாக்கப்பட்டது தான் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் என்கிற கட்சி புதுச்சேரி மக்களுக்கானது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை 70 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி செய்தவர்களால் புதுச்சேரி மாநிலத்தில் மக்களின் வாழ்வாதாரமாக இருந்த ஐந்து மில்களை மூடியது, இந்தியாவில் ரேஷன் கடை இல்லாத மாநிலமாக புதுச்சேரியை மாற்றியது, இந்தியாவில் புதுச்சேரி மாநிலத்தில் மட்டும் குப்பைக்கு வரி போட்டது, சாதாரண மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல் டீசல் விலையேற்றம், காமராஜர் ஆட்சி என்று கூறி கொண்டு பெண்கள் குடிக்க லஞ்சம் பெற்று ரெஸ்டோ பார் ஆரம்பிக்க அனுமதி கொடுத்தது, கல்வியில் சி பி எஸ் பாடத்திட்டத்தை புகுத்தி சாதாரண மக்களின் பிள்ளைகளின் படிப்பை பாழாக்கியது , மின் கட்டணத்தை உயர்த்தி கந்து வட்டி போன்று பல சேவை வரிகளை திணித்து சாதாரண மக்களை வஞ்சித்தது, புதுவையில் தொழிற்சாலைகளை மூடி வேலையில்லா திட்டத்தை ஏற்படுத்தியது, அனைத்து துறைகளிலும் ஊழல் , உள்ளாட்சி தேர்தல் நடத்தாமல் தனது அதிகாரம் போய்விடக்கூடாது என்பதற்காக மக்களை ஏமாற்றியது, லஞ்சம் பெற்று மதுபான தொழிற்சாலைக்கு அனுமதி கொடுத்ததினால் நிலத்தடி நீர் குறைந்து முழுமையாக பாதித்து பல உயிர்கள் பறிபோனது இந்த ஆட்சியாளர்களால் தான் என்பதை யாரும் மறந்து விடமுடியாது. இவையெல்லாம் மாற்றப்படவேண்டும் என்றால் உங்கள் கையில் இருக்கும் ஓட்டு என்கிற ஆயுதம் தான்.

புதுச்சேரியில் ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்கள் தான் அதிகம். ஆனால் பெண்கள் அரசியல் அதிகாரத்திற்கு வரமுடியவில்லை. அதற்கு நீங்கள் தான் காரணம். பெண்கள் அதிகாரத்திற்கு வந்தால் தான் சாதாரண மக்களின் பிரச்சனைகள் முடிவுக்கு கொண்டு வர முடியும். அண்டை மாநில மான தமிழ்நாட்டில் பெண் முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா அவர்கள் இருந்ததால் தான் சாதாரண மக்களும் சுபிட்சம் அடைந்தார்கள். மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தலைமையில் ஆட்சி நடப்பதால் தான் இன்றுவரை அந்த அம்மாவை எதிர்க்கட்சிகள் வீழ்த்த முடியவில்லை. ஆகவேதான் புதுவையிலும் ஒரு பெண் முதலமைச்சர் தலைமையில் ஆட்சி அமைந்தால் மக்கள் சுபிட்சமாக இருப்பார்கள். ஆட்சியில் ஊழல் குறையும், மக்கள் நல திட்டங்கள் ஊழல் இல்லாமல் அனைத்தும் நிறைவேறும். நிதி ஆதாரம் பெருகும் . கடன் சுமை குறையும். டெல்லிக்கு சென்று எளிதாக மாநில அந்தஸ்து பெற்று தருவார்கள். ஒரு குடும்பத்தை பெண் நிர்வகித்தால் அந்த குடும்பம் எப்படி சுபிட்சம் அடையுமோ அதுபோல புதுச்சேரியை ஒரு பெண் முதல்வராக வந்து ஆட்சி செய்தால் புதுவை வளர்ச்சி பெரும் . ஆகவேதான் புதுவையிலும் ஒரு பெண் முதல்வராக வர நாம் அனைவரும் ஒன்று கூடி உழைத்து ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் அதற்கு ஆ எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் என்றும் துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸி லி வெங்கட்ராமன் பேசினார்.

முடிவில் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் திருமதி . கவிதா நன்றி கூறினார்.

## திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு!!

திருவண்ணாமலை: டிச. 13–

திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். 1.3 லட்சம் நிர்வாகிகள் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம்தோறும் நிர்வாகிகள் சந்திப்பை நடத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

## துவரங்குறிச்சி ஸ்ரீ வெள்ளை விநாயகர் ஆலயத்தில் ராகு கால பூஜை :



திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சியில் ஸ்ரீ வெள்ளை விநாயகர் ஆலயத்தில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி அம்பிகைக்கு ராகு கால பூஜை நடைபெற்றது . இதில் ஏராளமான பக்த கோடிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வீரய்யா வாண்டையார் நினைவு புஷ்பம் கல்லூரி எம்பிஏ துறையில் தொழில் தயார்திறன் நிகழ்ச்சி நடைபெற்றது.



தஞ்சாவூர் நவ 13.

தஞ்சை மாவட்டத்தில் புகழ்பெற்ற பூண்டி. வீரய்யா வாண்டையார் நினைவு புஷ்பம் கல்லூரி நிறைய நிபுணர்களையும் கல்வியாளர்களையும் உருவாக்கிய பெருமை அதற்கு உண்டு.

மத்திய மாநில அரசுகளின் பணியாற்றும் நிறைய அலுவலர்கள் கல்லூரியில் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மாணவர்களுக்கான சிறப்புரை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரியின் எம்பிஏ துறையில், முன்னாள் இயக்குநரும் முதல் வருமான டாக்டர் எத்திராஜ். வேலைவாய்ப்புள்ள பட்டதாரியாக எப்படி உருவெடுப்பது என்ற தலைப்பில் மாணவர்களுக்கு சிறப்புரை வழங்கினார்.

இந்நிகழ்வில் 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்தனர். மாணவர்களின் சிந்தனை வளத்தை விரிவுபடுத்தி, தொழில் உலகில் தங்களைத் தயார்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி மிகுந்த பயனளிக்கக் கூடியதாக அமைந்தது. நிகழ்வின் தொடக்கத்தில் கல்லூரியின் முதல்வர் டாக்டர் மணிராஜ் வரவேற்புரை யாற்றினார். இயக்குநர் டாக்டர் ஜெகன் நன்றியுரையாற்றி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

துணை முதல்வர், தேர்வுகள் கட்டுப் பாட்டாளர் மற்றும் புலத்தலைவர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## தொடக்கப் பள்ளியில் பாரதி வேடமணிந்து மாணவர்களின் பேச்சரங்கம்



வந்தவாசி, டிச 13:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கடைசி குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மகாகவி பாரதியாரின் 144 வது பிறந்தநாள் விழா நடைபெற்றது இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை லட்சுமிபாய் தலைமை தாங்கினார். வந்தவாசி வட்ட தமிழ்ச் சங்க தகவல் தொடர்பாளர் கேப்டன் பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, பாரதி கண்ட பாரதம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும் பாரதியார் வேடமிட்டு பாரதியார் குறித்த பாடல், பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் சமூக ஆர்வலர் சுரேந்தர் நன்றி கூறினார்.



புதிய நியாயவிலை கடை திறப்பு விழா. வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மாநகராட்சி உட்பட்ட அரியூர் திருவள்ளூர் நகர் பகுதியில் புதிய புதிய நியாயவிலை கடை திறப்பு விழாவில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்த வைத்து முதல் விற்பனை தொடங்கி வைத்தார் இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு பகுதி செயலாளர் .ஐயப்பன் மண்டல குழு தலைவர் ஷி.வெங்கடேசன் அவைத்தலைவர் ரவி வட்ட செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பொது மக்கள் உடன் இருந்தனர்.

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து: பிரதமரை நேரில் சந்திக்கத் தயங்குவது ஏன்?

## ஆளும் கூட்டணியை சாடும் ஏ.கே.ஆர். கட்சி

புதுச்சேரி, டிச. 13–

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி பிரதமரை நேரில் சந்திக்கத் தயங்கும் ஆளும் என்.ஆர். காங்கிரஸ் பா.ஜ.க கூட்டணியின் செயல், மக்களுக்குச் செய்யப் படும் வெட்கக்கேடான அரசியல் துரோகம் என்று ஏ.கே.ஆர். தேசிய மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஏ.கே. ராஜசேகர் கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் கூறியிருப்ப தாவது:

நிர்வாக முடக்கம் மற்றும் அதிகாரப் போட்டி

புதுச்சேரியில் மக் களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசுக்கு முழுமை யான அதிகாரமோ, நிதிச்



சுதந்திரமோ இல்லை. ஆளுநருக்கும், முதலமைச் சருக்கும் இடையிலான 'இரட்டைத் தலைமை' அதிகாரப் போட்டியால் நிர்வாகம் உச்சக்கட்ட ஸ்தம்பித நிலையில் உள்ளது. இது மக்களின் ஜனநாயக உணர்வுகளை மதிக்காத, மத்திய அரசின் அலட்சியப் போக்காகும். கடந்த 60 ஆண்டுகளில் 16 முறை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும், மத்திய அரசுகள் புதுச்சேரியை வஞ்சித்து வருகின்றன.

ஆளும் கூட்டணிக்கு சரமாரி கேள்வி: மத்தி யிலும், மாநிலத்திலும் ஒரே கூட்டணி (என். ஆர்.காங்கிரஸ் – பா.ஜ.க) ஆட்சியில் இருந்தும், மாநில அந்தஸ்தை எளிதாகப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தும் அதைச் செய்யாதது ஏன்? என்று ஏ.கே. ராஜசேகர் கேள்வி எழுப்பியுள்ளார். அதிகாரிகள் தன் பேச்சைக் கேட்பதில்லை என முதலமைச்சர் குமுறுவதும், ஆனால் தீர்வு காணப் பிரதமரைச் சந்திக்கத் தயங்குவதும் வேடிக்கையாக உள்ளது. வெறும் சட்டமன்றத் தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றிவிட்டு, 60 ஆண்டு காலப் போராட்டத்தைக் கேலிக்கூத்தாக்காமல், உருப்படியான நடவடிக் கையை அரசு எடுக்க வேண்டும்.

சுயேச்சை எம்.எல்.ஏ.வுக்கு பாராட்டு: மாநில அந்தஸ்து கோரி டெல்லி வரை சென்று போராடிய உருளையன்பேட்டை சுயேச்சை எம்.எல்.ஏ. நேரு (எ) குப்புசாமி அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. ஒரு தனி எம்.எல்.ஏ. மக்களின் உணர்வுகளை மதித்துப் போராடும் நிலையில், அரசு மௌனம் காப்பது வேதனையானது.

மாநில அந்தஸ்தே நிரந்தரத் தீர்வு: நிதி நெருக்கடி, வேலைவாய்ப் பின்மை, உள்கட்டமைப் புத் தேக்கம் மற்றும் அதிகாரிகளின் பணி முடக்கம் ஆகிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் 'மாநில அந்தஸ்து' மட்டுமே ஒரே நிரந்தரத் தீர்வாகும். மாநில அந்தஸ்து கிடைத்தால் மட்டுமே: மத்திய நிதிக் குழுவின் மூலம் நேரடி நிதிப் பங்களிப்பு கிடைக்கும். துறைமுகம், சுற்றுலா மற்றும் தொழில் முதலீடுகள் பெருகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு சட்டம் ஒழுங்கு மற்றும் நிர்வாகத்தில் முழு அதிகாரம் கிடைக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். பிரதமரைச் சந்திக்க வலியுறுத்தல் இனியும் காலதாமதம் செய்யாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 சட்டமன்ற உறுப்பினர் களும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு டெல்லி செல்ல வேண்டும். அங்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து, மாநில அந்தஸ்து கோரிக் கையை வலியுறுத்திப் பெற்றுத் தர வேண்டும். இந்த முன்னெடுப்பை புதுச்சேரி அரசு மேற்கொண்டால், ஏ.கே. ஆர் தேசிய மக்கள் கட்சி அதற்கு முழு ஆதரவு அளிக்கும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மூடூர் சீனிவாச பெருமாள் கோயில் வருட உற்சவ வைபவம்



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மூடூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ அலர்மேல்மங்கை சமேத ஸ்ரீசீனிவாச பெருமாள் கோவிலில் வருட உற்சவ விழா இரண்டு நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது. முதல் நாள் உற்சவத்தில் அங்குரார்பணம், விசேஷ ஹோமம், பூர்ணாஹுதி, சாற்றுமுறை உள்ளிட்டவை நடந்தேறியது. தொடர்ந்து இரண்டாம் நாள் கோ பூஜையுடன் கூடிய வருட உற்சவம் தொடங்கியது. பிறகு தன்வந்திரி பகவான் ஹோமங்கள், பிரபந்த தனியன்கள், தேசிக பிரபந் பாராயணம் நடைபெற்றது. பிறகு மூல மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் திருமஞ் சனம் நடந்தேறியது. இஞ்சிமேடு பாலாஜி ஸ்வாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இயங்கி வரும் APJ அப்துல் கலாம் IAS அகாடமியில் மக்கள் ஜனாதிபதி ஏபிஜே அப்துல் கலாமின் வல்லரசு இந்தியா இயக்கம் சார்பில் சமூக சேவகரும் முதுநிலை வருவாய் ஆய்வாளருமான கண்ணன் தலைமையில் மகாகவி பாரதியார் பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் மகாகவி பாரதியாரின் திருவருடவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியும், மாணவ மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கியும், பாரதியாரின் இந்திய சுதந்திரப் போராட்ட அர்ப்பணிப்பு, தமிழ் தொண்டு, பெண் விடுதலை இன்னும் எண்ணற்ற தொண்டாற்றி மறைந்த அவரது பணிகளை நினைவு கூறும் வகையில் மாணவர்களுடன் கலந்துரையாடி சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முனைவர் விஜயலட்சுமி, கிராம நிர்வாக அலுவலர் .அருள்தாஸ், செஞ்சி தாலுகா திருமண மண்டப உரிமையாளர் சங்க தலைவர் சுமங்கலி பன்னீர்செல்வம் , அஞ்சலை அம்மாள் செவிலியர் கல்லூரி மாணவர்களுடன் பேராசிரியர் மலர் மற்றும் APJ அப்துல் கலாம் IAS பயிற்சி மைய மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புதுச்சேரியில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கான 'பெத்தாங்' அரங்கம் திறப்பு: மலேசிய போட்டியில் பங்கேற்க இலக்கு!






புதுச்சேரி, டிசம்பர் 13

புதுச்சேரி மரப்பாலம் பகுதியில், உறுப்பு மாற்று மற்றும் மாற்றுத் திறனாளிகள் விளை யாட்டு கழகம் (Organ Transplant and Differently Abled Sports Club) சார்பாக அமைக்கப்பட்ட புதிய விளையாட்டு மைதானம் நேற்று (டிசம்பர் 11) மாலை 6:30 மணியளவில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த விழாவில் திருமதி. ப்ரீத்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய மைதானத்தைத் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்கள்: இந்நிகழ்வானது, 'ஆரஞ்சு பெத்தாங் பவுண்டேஷன்' (Orange Petanque Foundation) நிறுவனர் எஸ்தர் விஜயராணி மற்றும் அப்பவுண்டேஷ னின் தலைவர் அபிஷேக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நோக்கம் மற்றும் எதிர்காலத் திட்டம்: புதுச்சேரியின் பாரம்பரிய விளையாட்டான 'பெத்தாங்' (Petanque) விளையாட்டிற்காக இந்த அரங்கம் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட் டுள்ளது. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் உடல் நலத்தைப் பேணவும், விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கவும் இந்த மையம் வழிவகுக்கும். சர்வதேச போட்டிகளில் பங்கேற்று இந்தியாவிற்குப் பெருமை சேர்ப்பதே இவர்களின் முக்கிய நோக்கமாகும். இதன் ஒரு பகுதியாக, வரும் மார்ச் மாதம் தாய் லாந்தில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டியில் இக்கழக வீரர்கள் பங்கேற்று விளையாட உள்ளனர் என்ற மகிழ்ச்சி யான தகவலும் இவ் விழாவில் தெரிவிக்கப் பட்டது.

நிர்வாகிகள் பங்கேற்பு: இந்நிகழ்வில் உறுப்பு மாற்று மற்றும் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு கழகத்தின் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்: தலைவர் (President): பத்ரிஷ் தலமாஸ் செயலாளர் (Secretary): கணேஷ் கார்த்திக் பொருளாளர் (Cashier): வீராஒருங்கிணைப்பாளர் (Coordina tor): ஜெகநாத் மேலும், அணியின் பயிற்சியாளர் (Coach) செய்யத் காசின், ஆலோசகர் (Advisor) மஞ்சினி மற்றும் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

# சேலம்,வாழப்பாடியில் சுவரொட்டியால் பரபரப்பு.

சேலம் மாவட்டம் வாழப்பாடியில் அமைதி நிலவும் தமிழ்நாட்டில் முருகன் பெயரில் மதவெறியா ?எனக் குறிப்பிட்டு,கருப்பு நிறத்தில் ஒட்டப்பட்ட சுவரொட்டியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




திருப்பரங்குன்றத்தில் தீபத்தூணில் தீபம் ஏற்றுவது குறித்த விவகாரம் தமிழகம் முழுவதும் பேசு பொருளாகியுள்ள நிலையில், சேலம் மாவட்டம் வாழப்பாடியில் பேருந்து நிலையம் உள்ளிட்ட மக்கள் கூடும் பொது இடங்களில், முருகனின் வேல், மசூதி, தேவாலயங்களின் படங்களுடன் அமைதி நிலவும் தமிழ்நாட்டில் முருகன் பெயரில் மதவெறியா? காக்க காக்க தமிழ் நாட்டை காக்க, விரட்ட விரட்ட மதவெறி கும்பலை விரட்ட போராடுவோம் வெல்வோம் என்ற வாசகத்துடன் கருப்பு வண்ணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது. இந்த சுவரொட்டிகளால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சுவரொட்டிகளை அச்சிட்டு ஒட்டியவர்கள் யார்? எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்? என்பது குறித்து, வாழப்பாடி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆடு திருட்டில் பல நாட்களாக ஈடுபட்டவரை வளநாடு போலீசார் கைது செய்து வழக்கு பதிந்து சிறையில் அடைத்தனர்



திருச்சி. டிச. 13–

திருச்சி மாவட்டம், வளநாடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பல நாட்களாக ஆடு திருடு போவதாக கிடைத்த தகவலின் பேரில் இன்று அயன்பொருவாய் ( அஞ் சல் ), வெள்ளக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ராமகோபால் என்பவரது மகன் விஸ்வநாதன் ( 27 ), என்பவர் நேற்று 10. 12 .2025 ஆம் தேதி இரவு சுமார் 10 மணி அளவில் இவரது வீட்டின் அருகே இவரது 12 கிலோ எடையுள்ள ஆட்டை கட்டி வைத்து விட்டு தூங்க சென்று விட்டு மீண்டும் இன்று 11 .12 . 2021 ஆம் தேதி அதிகாலை சுமார் 5 மணியளவில் வீட்டில் வெளியே வந்து பார்த்தபோது வீட்டின் வெளியே கட்டி வைக்கப்பட்டிருந்த ஆட்டை அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் திருடி சென்று விட்டதாக வளநாடு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்திருந்தார் . மேற்படி புகார் மனுவை விசாரணை செய்த வளநாடு காவல் நிலைய பயிற்சி காவல்துணை கண்காணிப்பாளர் விக்னேஷ் மேற்படி ஆடு திருடப்பட்ட பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராவை சோதனை செய்ததில் ஆட்டை திருடி சென்றது புதுக் கோட்டை மாவட்டம் , இலுப்பூர் வட்டம் , பரம்பூர் அஞ்சல், வண்ணாரப்பட்டியை சேர்ந்த பழனிச்சாமி மகன் குமார் (28) என்பவர் இன்று தெரியவந்ததை அடுத்து குமார் என்பவரை வளநாடு காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்து ஆட்டை திருடி சென்றது தொடர்பாக அவர் மீது வளநாடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைக்கப்பட்டார்.

# சேலம் ஓமலூரைச் சேர்ந்த நர்ஸ் சுகன்யா செயலால் கர்ப்பிணி உயிரிழப்பு.

## 3 வதும் பெண் குழந்தை என்பதால் வீட்டிலேயே கருக்கலைப்பு முயற்சியில் மனைவி பலி.



சேலம். டிச. 13–

தருமபுரி மாவட்டம் ஏரியூர் அருகே பூச்சூர் என்ற கிராமம் உள்ளது.அங்கு கண்ணன் என்பவர் வசித்து வருகிறார்.

இவருக்கு ரம்யா (26) என்ற மனைவி உண்டு. இவர்களுக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இத்தம்பதிக்கு ஏற்கனவே இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன. இந்த நிலையில், ரம்யா மூன்றாவதாக மீண்டும் கர்ப்பம் தரித்திருந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு ரம்யா மாடிப்படிகளில் இருந்து தவறி விழுந்து இறந்துவிட்டதாக கண்ணன் உறவினர்களிடம் கூறினார். ரம்யாவின் மரணத்தில் அவரது பெற்றோருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அவர்கள் ஏரியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இன்ஸ்பெக்டர் சுரேஷ் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினார். விசாரணையில் அதிர்ச்சி தகவல்கள் வெளியாயின. கண்ணனுக்கு ஏற்கனவே இரண்டு பெண் குழந்தைகள் இருந்தன. இதனால், இந்த முறை பெண் குழந்தை பிறக்கக் கூடாது என்று அவர் நினைத்துள்ளார். கருவில் இருப்பது ஆணா, பெண்ணா என அறிய அவர் சட்டவிரோத செயலில் இறங்கியுள்ளார். சேலம் ஓமலூரைச் சேர்ந்த நர்ஸ் சுகன்யா (35) மற்றும் புரோக்கர் வனிதா (35) ஆகியோருடன் அவர் பேசியுள்ளார்.

நர்ஸ் உதவியுடன் ஸ்கேன் செய்து பார்த்ததில், அதுவும் பெண் குழந்தை எனத் தெரியவந்தது. இதனால், கண்ணன், நர்ஸ் மற்றும் புரோக்கர் மூவரும் சேர்ந்து வீட்டிலேயே ரம்யாவுக்கு கருக்கலைப்பு செய்யத் திட்டம் தீட்டினர். சட்டவிரோத கருக்கலைப்பின் போது ரம்யாவுக்கு அதிக அளவில் ரத்தப் போக்கு ஏற்பட்டது. பயந்துபோன மூவரும் ரம்யாவை சேலம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், சிகிச்சை பலனின்றி ரம்யா வழியிலேயே உயிரிழந்தார். மாடிப்படி நாடகத்தை போலீசார் கண்டுபிடித்தனர். சட்டவிரோத கருக்கலைப்பு மூலம் மனைவியை கொன்ற வழக்கில் கண்ணன், நர்ஸ், புரோக்கர் என மூன்று பேரையும் போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இருக்கும் போது ரத்ததானம்....
இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஈரோடு ஆட்சியர் ஆய்வு



வரவுள்ள 2026 ஆம் ஆண்டில் நடைபெறும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலுக்கான, மின்னணு வாக்கு எந்திரங்கள் ஈரோடு கோட்டாட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள, அவைகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன், ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி நேற்று ஆய்வு செய்தார். தேர்தல் அலுவலர்கள் உடன் உள்ளனர்.

## திருவள்ளூரில் ஆதித்திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்பு விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு மூன்றாம் காலாண்டு கூட்டம் :



திருவள்ளூர் டிச 13 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்பு விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு மூன்றாம் காலாண்டு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார். கூட்டத்தில் எஸ்.சி, எஸ்.டி வன்கொடுமை தடுப்புச் சட்ட பிரிவு வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு வழங்கும் தீருதவித்தொகை உரிய காலக்கெடுவிற்குள் வழங்குவது தொடர்பாகவும், வன்கொடுமை நிலுவை வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், ஆய்வு செய்யப்பட்டது.

கூட்டத்தில் சார் ஆட்சியர் (பொன்னேரி) கு.ரவிகுமார், வருவாய் கோட்டாட்சியர்கள் திருவள்ளூர்,திருத்தணி ரவிச்சந்திரன், என்.எம். கனிமொழி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமார், காவல் துறையினர், சமூக நீதி பிரிவு அலுவலர், அரசு சிறப்பு வழக்கறிஞர் எஸ்.சி,எஸ்.டி பிரிவு, மாவட்ட மற்றும் அலுவல் சாரா குழு உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறை திறக்கப்பட்டு பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொறியாளர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஹென்றி பீட்டர், திருசசிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் சாலை தவவளன், தேர்தல் வட்டாட்சியர் சக்திவேல் முருகன், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொறியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கபபட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பாரதிய ஜனதா கட்சியின் பட்டியல் அணி சார்பில் நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம்



செஞ்சி டிச 13.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா நாட்டார் மங்கலத்தில் பா.ஜ.கவின் பட்டியல் அணி சார்பில் நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் மாவட்ட தலைவர் ஏழுமலை தலைமையில் நடைபெற்றது.

பட்டியல் அணி மாவட்ட பொது செயலாளர் என்.எம். வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றார் .சிறப்பு அழைப்பாளராக மாவட்ட துணைத்தலைவர் வழக்கறிஞர் என .ஏ. எழுமலை செஞ்சி கிழக்கு ஒன்றிய பொதுசெயலாளர் சிவாஜி பொருளாளர் முனுசாமி கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினர்.

தொடர்ந்து நிர்வாகிகளுக்கு சால்லை அணிவிதத்து அறிமுகப்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் வினோத் மாவட்ட துணை தலைவர் கே ஏழுமலை மாவட்ட செயலாளர் மாரிமுத்து மண்டல தலைவர் நாராயணசாமி ஒன்றிய பொது செயலாளர் சுகுமார் லோகநாதன் மற்றும் மகளிர் அணி சுகன்யா சுசிலா விமலா மற்றும் பலர் கலந்துகொண்டனர்

# திருவள்ளூரில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் வாழ்வாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம்



திருவள்ளூர் டிச 13 :

திருவள்ளூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மாவட்ட திட்ட அலுவலர் எஸ்.கே. லலிதா தலைமை தாங்கி பேசுகையில், பெண்கள் குடும்பத்தின் முதுகெலும்பு ஆவார்கள். பெண்களுக்கு சம வாய்ப்பு, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார சுதந்திரம், கௌரவம் ஆகியவற்றை உறுதி செய்தால் பெண்கள் குடும்பத்திலும் சமுதாயத்திலும் சிறந்த பெண்களாக இருப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என கூறினார்.பூண்டி ஒன்றிய ஆணையர் என். சுலோச்சனா, வட்டார வளர்ச்சி அலுவலர் எஸ். செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஐ.ஆர்.சி.டி.எஸ் நிர்வாக செயலாளர் ஸ்டீபன் அனைவரையும் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சமூக நல அலுவலர் எஸ். வனிதா, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் எதிலும் சோர்ந்து போகாமல் வாய்ப்புகளையும், அரசு நலத்திட்டங்களையும், வங்கி கடன்களையும் பயன்படுத்தி வாழ்க்கையில் உயர வேண்டும். அனைத்து பெண்களும் படிக்க வேண்டும். பெண்கள் பொருளாதார நிலையில் உயர்ந்தால் தான் தனித்துவமாக குடும்பத்திலும் சமுதாயத்திலும் திகழ முடியும் என்று கூறினார். பின்னர் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் எஸ். ரவிச்சந்திரன் ஆதரவற்ற விதவைகளுக்கான சான்றிதழ், சாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பெண்களுக்கு சொத்தில் பங்கு கிடைப்பதற்கான வழிவகை குறித்தும், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் முன்னேற்றத்திற்கு வருவாய் துறை துணை நிற்கும் என்று கூறினார்.

மேலும் தாட்கோ மாவட்ட மேலாளர் ஆர். சரண்யா தாட்கோ செயல்படுத்தும் திட்டங்கள், விண்ணப்பிக்கும் வழிமுறைகள் குறித்து எடுத்து கூறினார். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டி மையத்தின் உதவி இயக்குனர் கே. விஜயா வேலை வாய்ப்புகளில் ஆதரவற்ற விதவைகளுக்கு உள்ள இடஒதுக்கீடு, இலவசமாக அளிக்கப்பட்டு அரசு போட்டி தேர்வுகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து எடுத்து கூறினார். மாவட்ட தொழில் மைய உதவி இயக்குனர் மு. எழில் செல்வன் அவர்கள் மாவட்ட தொழில்நெறி மையத்தின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இதில் சில்ட்ரன் பிலீவ் நிறுவனத்தின் இயக்குனர் நான்சி ஜே அனபெல், வழக்கறிஞர் டான் பாஸ்கோ, போந்தவாக்கம் பேங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் எ. சரத்குமார், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் எம். நிஷாந்தினி மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மலர்விழி ஐ.ஆர்.சி.டி.எஸ் திட்ட இயக்குனர் ப்ரீத்தி டைட்டஸ், திட்ட மேலாளர் விஜயன், ஒருங்கிணைப்பாளர்கள் பழனி, பிரியங்கா மற்றும் சரண்யா, தொண்டு நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் பூங்கொடி நன்றி கூறினார்.

## ஒரு வார காலத்திற்கு (17.12.2025 முதல் 26.12.2025 வரை) ஆட்சிமொழிச் சட்டவார விழா கொண்டாடப்படவுள்ளது

### மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், டிச. 13–

2019 2020ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை அறிவிப்பில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளை நினைவுகூரும் வகையில் நிகழாண்டில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒரு வார காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஆணையின் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டத்தில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் 17.12.2025 முதல் 26.12.2025 வரையிலான ஒரு வார காலத்திற்கு கொண்டாடப்படவுள்ளது. ஆட்சிமொழிச் சட்ட வாரம் தொடர்பான நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும்.

ஆட்சிமொழிச் சட்ட வார விழா தொடர்பான நிகழ்வுகளில், ஒரு நாள் நிகழ்வாக ஆட்சிமொழிச் சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் 26.12.2025 அன்று காலை 10.30 மணியளவில் தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்கள், கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் ஆட்சிமொழி விழிப்புணர்வுப் பேரணி, மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலத்திலிருந்து தொடங்கி மாநகராட்சி அலுவலகம் வரை வந்தடையவுள்ளது. இப்பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து தொடங்கிவைக்கவுள்ளார்.

மேலும், 17.12.2025 முதல் 19.12.2025 ஆகிய நாள்களுக்கு கணினித்தமிழ் ஒருங்குறி பயன்பாடு, ஆட்சிமொழிச் சட்ட அரசாணை, மொழிப்பயிற்சி, கலைச்சொல்லாக்கம், வரைவுகள், குறிப்புகள் எழுதுதல் முதலிய தலைப்புகளில் திண்டுக்கல் மாவட்ட வனத்துறை கூட்ட அரங்கில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சியும், 22.12.2025 அன்று தொழிலாளர் துறையினருடன் வணிக நிறுவன உரிமையாளர்கள், வணிக நிறுவன அமைப்புகளுடன் இணைந்து வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் தமிழில் அமைத்திட வலியுறுத்தி தொழிலாளர் துறை அலுவலக சிறுகூட்டரங்கில் கலந்தாய்வுக் கூட்டமும்,

24.12.2025 அன்று தமிழ் அமைப்புகள், நிர்வாகிகளுடன் இணைந்து திண்டுக்கல் மாவட்ட மைய நூலகத்தில் ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டமும், 23.12.2025 அன்று முற்பகல் ஆட்சிமொழிச் சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்கும் பட்டிமன்றம் நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் செ. சரவணன் தெரிவித்துள்ளார்.

## பணம் வைத்து சூதாடிய கும்பல் 12 பேர் மீது வழக்கு பதிவு.

மணப்பாறை டிசம்பர் 13

திருச்சி மாவட்டம் மணப்பாறை, வையம்பட்டி, எளமனம், புத்தாநத்தம், துவரங்குறிச்சி, வளநாடு, மற்றும் இதனை உள்ளடக்கிய பகுதிகளில் திருச்சி மாவட்ட கண்காணிப்பாளர் செல்வநாகரத்தினம் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் தனிப்படை போலீசார் சோதனை இட்டு கைது செய்த நிலையில் மாவட்ட கண்காணிப்பாளருக்கு புகார் வந்ததன் அடிப்படையிலும் நேற்று மணப்பாறை போலீசார் மணப்பாறை அருகே குமாரப்பட்டி பகுதியில் பணியில் ஈடுபட்டு இருந்த பொழுது பகுதியில் சீட்டுக் கட்டுகளை வைத்து சூதாடிய மணப்பாறை அண்ணாவி நகர் இருளப்பன், இலுப்பூர் கோட்டை தெரு, செல்வராஜ், புதுக்குடி சீனிவாசன், இலுப்பூர் ஜாகிர் உசேன், தேங்காய் தின்னிப்பட்டி கார்த்திக் ராஜா, விராலிமலை நடராஜமூர்த்தி, மற்றும் சுரேஷ்குமார், மணப்பாறை அண்ணாவி நகர் ஷேக் இப்ராஹிம், வாகைகுளம் சதாம் உனசன். உள்ளிட்ட இவர்களிடமிருந்து சீட்டுக்கட்டுகளை பறிமுதல் செய்து வழக்குப்பதிவு செய்த மணப்பாறை போலீசார்.



நாமக்கல் மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்ட சரிபார்க்கும் பணி பார்வையாளர் / கூடுதல் மாநில தேர்தல் ஆணையர் (பஞ்சாப்) எஸ்.எஸ்.ஃபால் மாவட்ட ஆடுசியர் அலுவலக வளாகத்ல் உள்ள வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதுற்கட்ட சரிபார்க்கும் பணியினை பார்வையிட்டார். உடன் மாட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் கிரீன் ஆப் பள்ளிபாளையம் அறக்கட்டளை சார்பில் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு மரக்கன்று நடும் விழா நடைபெற்றது...





நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் கிரீன் ஆப் பள்ளிபாளையம் அறக்கட்டளை தேசிய மாணவர் படை தேசிய பசுமை படையினர் சார்பில் மீண்டும் மஞ்சப்பை என்னும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது தொடர்ந்து பிளாஸ்டிக் ஒழிப்பு மரக்கன்றுகள் நடும்பிலா சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது...

நாமக்கல் மாவட்டம் மாசு கட்டுப்பாட்டு வாரியர் சுற்றுச்சூழல் பொறியாளர் செல்வகணபதி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்..

தொடர்ந்து இந்த நிகழ்வில் குமராபாளையம் வட்டாட்சியர் பிரகாஷ் பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர் தயாளன் கிரீன் ஆப் பள்ளிபாளையம் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் கவிப்பிரியா மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மற்றும் பள்ளியின் தலைமையாசிரியர் உமாமகேஸ்வரன் உதவி தலைமை ஆசிரியர் முருகேசன் தேசிய மாணவர் படை அலுவலர் மு கார்த்தி

## நடிகர் ரஜினிகாந்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து..!

சென்னை: டிச. 13–

நடிகர் ரஜினிகாந்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். மென்மேலும் வெற்றி படைப்புகளை அளித்து மக்களின் அன்போடும் ஆதரவோடும் ரஜினியின் வெற்றிக் கொடி பறக்கட்டும். வயதை வென்ற வசீகரம், மேடையில் ஏறினால் அனைவரையும் மகிழ்விக்கும் சொல்வன்மை கொண்டவர் ரஜினிகாந்த்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத கள்ளம் கபடமற்ற நெஞ்சம் ரஜினிகாந்த் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421